பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 04 2026** **WEDNESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1.** நடப்பு பருவத்திற்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான உரமானியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**2.** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

**3.** தமிழக அரசின் தலைமைச் செயலரை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது கண்டிக்கத்தக்கது என்று திமுக கூறியுள்ளது.

**4.** பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை திமுக அரசு ஏற்படுத்தியுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5.** உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

நடப்பு பருவத்திற்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான உரமானியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இதற்காக 41 ஆயிரத்து 534 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்கிடையே, விவசாயிகள் நலனில் மத்திய அரசு அக்கறையுடன் உள்ளது என்பதையே மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு எடுத்துரைப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விவசாயிகளுக்கு எப்போதும்போல் குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பது இதன்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, தமிழக தலைமைச்செயலரை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

இப்பொறுப்பினை வகித்து வந்த திரு முருகானந்தம் இடமாற்றம் செய்யப்பட்டு, அவருக்கு பதிலாக திரு சாய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், ஆயுதப்படை மற்றும் லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு பிரிவு காவல்துறை தலைவராக இருந்த திரு டேவிட்சனும்

இடமாற்றம் செய்யப்பட்டு, அப்பதவிக்கு திரு சந்தீப் மிட்டலை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு தேர்தல் தொடர்பான எவ்வித பணிகளையும் வழங்கக்கூடாது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட 7 ஆயிரத்து 599 வேட்புமனுக்களில், 5 ஆயிரத்து 86 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

2 ஆயிரத்து 470 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நாளை கடைசி நாள் என்பதால், நாளை மாலையே இறுதி வேட்பாளர் பட்டியலும் வெளியிடப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக அரசின் தலைமைச் செயலரை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது கண்டிக்கத்தக்கது என்று திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தலைமைச் செயலர் மற்றும் டிஜிபி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையம் ஒருதலைபட்சமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் திரு மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாகவும், இதற்கு திமுக அரசுதான் காரணம் என்றும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

அஇஅதிமுக ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாகவும் அவர் குறை கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழக மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களிக்க முடிவு செய்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திமுக ஆட்சியில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது.

ஊழல் அற்ற பாதுகாப்பான தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக, தங்கள் கூட்டணிக்கு ஆதரவு அளிக்க வாக்காளர்கள் முடிவு செய்துள்ளதாகவும் பிஜேபி அதில் குறிப்பிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இளையோர் நலனுக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் அளித்து வருவதாக அக்கட்சி கூறியுள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இளையோர் நலனை கருத்தில்கொண்டு கூடுதல்

வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் காங்கிரஸ் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

சிறு-குறு தொழில்துறையினர் வளர்ச்சிக்கும் காங்கிரஸ் துணை நிற்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாம் தமிழர் கட்சி ஆட்சிப்பொறுப்பேற்றால் இலவச திட்டங்கள் ஒழிக்கப்படும் என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளார்.

ஆலந்தூரில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், கல்வி மற்றும் சுகாதார சேவைகள் கட்டணமின்றி வழங்கப்படும் என்றார்.

ஊழல் அற்ற நிர்வாகம் உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

திமுக ஆட்சி ஏன் தொடர வேண்டும் என்றும் திரு சீமான் கேள்வி எழுப்பினார்.

<<<<<<>>>>>>

திமுக-வின் கூட்டணி கணக்கு இந்த தேர்தலில் எடுபடாது என்று தவெக தலைவர் திரு விஜய் கூறியுள்ளார்.

இன்று நெல்லையில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், திமுக-வின் கூட்டணி கட்சிகளே திமுக-விற்கு வாக்களிக்காது என்று தெரிவித்தார்.

உண்மையான காங்கிரஸ் கட்சியினர் தவெக பக்கம்தான் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்றும் திரு விஜய் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கோடை வெயிலின் தாக்கத்தை சமாளிக்கும் வகையில், சேலம் மாவட்டத்தில் முக்கிய போக்குவரத்து சிக்னல்களில் பசுமை பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இது, இருசக்கர வாகனங்களில் செல்வோருக்கு பெரிதும் பயனளிப்பதாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் — 48 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழக கடலோர மாவட்டங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 43 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

மயிலாடுதுறையில் மாதிரி வாக்குச்சாவடி அமைத்து, வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-------------------

தேனியில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு நியமிக்கப்பட்ட நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

--------------------

சேலம் மாவட்டம் கத்திரிப்பட்டியில் விவசாய கிணற்றில் தவறி விழுந்த எட்டு மான்களை தீயணைப்புத் துறையினர் மூன்று மணிநேர போராட்டத்திற்கு பின்னர் மீட்டனர்.

<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஸ்பெயினின் **Granada**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

ஆசியா-ஓசியானா பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் **Paramjeet Kumar** வெள்ளிப்பதக்கத்தையும், **Manish Kumar** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-------------

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பி வி சிந்து, **15-21, 21-11, 21-19** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Wong Ling Ching**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பிரணாய், **24-22, 21-12** என்ற செட் கணக்கில், வியட்நாமின் **Nguyen Hai Dang**-ஐ வென்றார்.

--------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் **20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா **3-1** என்ற கோல் கணக்கில் சீன தைபே-யை வென்றது.

**<<<<<<END>>>>>>**